DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**CC.No.282/2022**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | மணி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.06.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் பாலக்குடியில் வசித்து வருகிறேன். கடந்த 03.02.2022ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எதிரிகள் மூவரும் என் வீட்டிற்கு வந்தார்கள். 1ம் எதிரி கோத்தா, கொம்மா என்று அசிங்கமாக பேசி என் பாதையில் ஏன் போகிறாய் என்று பேசி கம்பால் முதுகில் அடித்தார். அப்போது என் அம்மா வந்து மறைத்தார், அப்போது 1வது எதிரி என் அம்மாவை தேவிடியா முண்ட பிள்ளையா பெத்து வைத்திருக்கிறாய் என்று திட்டி முடியை பிடித்து இழுத்து அடித்தார். நான் விலக்க முற்பட்டபோது 2வது எதிரி சுதா என் இடது கை ஆட்காட்டி விரலை கடித்துவிட்டார். அங்கிருந்தவர்கள் விலக்கிவிட்டபிறகு நான் தேவகோட்டை அரசு

மருத்துவமனையில் சேர்ந்தேன். பின்னர் காவல் நிலையத்தில் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி புகார் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**CC.No.282/2022**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | நாகநாதன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கிருஷ்ணண் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.06.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் பாலக்குடியில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 03.02.2022 ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நானும் என் மனைவியும் வீட்டில் இருந்தபோது சத்தம் கேட்டது. நாங்கள் போனபோது அங்கே வாய்த்தகராறு நடந்து கொண்டிருந்தது. அங்கு போய் பார்த்ததில் சக்திவேல், தேவேந்திரன், சுதா, கருப்பாயி, சக்தி ஆகியோர்கள் நின்று சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். அவர்கள் சண்டை போட்டதை நாங்கள் விலக்கிவிட்டோம். இனிமேல் இந்த பக்கம் வந்தால் வெட்டாமல் விடமாட்டேன் என்று 1ம் எதிரி தேவேந்திரன் சக்திவேலை மிரட்டினார். போலீசார் 9 நாட்கள் கழித்து விசாரித்தார்கள்.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.